Reg. M. 2330. "SIDDHANTHAM" Vol. 16. No. 5

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 16	சுபானுஸ்ரீ வைகாசிமீ 1943ஸ்ரீ மேமீ	இதழ் 5

பத்திராசிரியர் :—திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

தாசில் பிள்ளை மாசில் பிள்ளை

[ம. பாலசுப்பிரமணியன்]

நமது சமாஜத் தலைவர்களுள் ஒருவரும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்றுவித்துப் பல ஆண்டுகள் அக்கழகத் தலைவராகப் பணிபுரிந்து வரும், திருவிற்கோலத்தில் 1932ஆம் நடைபெற்ற நமது சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவரும், உமாபதி சிவம் அருள்முறைத் திரட்டின் உரையாசிரியரும், நூற்றுக் கணக்கான தேவார திருவாசகப் பாடல்கட்கு உரையெழுதி "சித்தாந்தம்", "செந்தமிழ்ச் செல்வி" ...களில் வெளியிட்டவரும், திருவாசகத் ...ச்சி அகராதிகளைத் தொகுத்து உபகரித் ...கப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுத் திரு ...றையில் தமது இல்லத்தில் சிவமணங் ...ம்பி நன்முறையில் இல்லறம் நடத்திய

பெரியாரும், கார்காத்த வேளாள மரபில் தனவாருடைக் கோத்திரத்தில் தோன்றியவரும், எமது உயிரினுமினிய நண்பருமாகிய சைவத் திருவாளர் - மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. அவர்கள் நிகழும் சுபானுவரு சித்திரைமீ கஉ (14-4-1943) புதன்கிழமை காலை 9 மணிக்கு இறைவன் திருவடி நீழலடைந்த செய்தியை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். இப்பெரியார் திருநெல்வேலி ஜில்லாவிலும், தமிழ்க் கழகங்களிலும், சைவ சபைகளிலும் தாசில் பிள்ளை என்று அழைக்கப்படுவது வழக்கம். குறித்த காலம் தாழ்க்காது சபை நிகழ்ச்சிகளைத் தொடங்குதல் வேண்டும் என்று வற்புறுத்துவார். வயது முதிர்ந்தவராயினும் இளைஞர்கட்குரிய ஊக்கம் உழைப்பு முதலியவற்றிற் பதின்மடங்கு மிகுதியாக உடையவர். தமிழ் நூல்களை ஆராயும்முறை, ஆராய்ச்சி அகராதிகள் தொகுக்கும் பொறுமை, உரையெழுதும் நுட்ப அறிவு, சாத்திர நூனுக்கங்களைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கும் ஆற்றல் முதலியன இப்பெரியார்பாற் கண்ட நலங்களாகும். தூய நல்வாழ்க்கை நடத்தி ஒப்பற்ற சமயத் தொண்டுபுரிந்த தாசில் பிள்ளை அவர்களை மாசில் பிள்ளை என்றே சொல்லலாம். இப்பெரியாருடைய மக்களுக்கும் மற்ற உறவினருக்கும் நமது சமாஜத்தின் பிரிவாற்றாமையை அறிவிக்க விரும்புகிறோம்.

நமது சமாஜ நிர்வாக சபையினருள் ஒருவராகிய திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியாரவர்களுடைய அருமைத் தந்தையார் போயினார் என்று இவ்வாண்டு பிப்ரவரிமீ இதழில் தெரிவித்தோம். இப்போது அவர்களுடைய தாயாரும் போயினார் என்ற செய்தியை வருத்தத்தோடு அறிவிக்கிறோம்.

நமது சமாஜ ஆயுள் அங்கத்தவரும் சிறந்த சமாஜத் தொண்டருமாகிய கொழும்பு - அருள் தியாகராசனார் அவர்களுடைய தந்தையார் சிவபதமடைந்த செய்தியையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். இப்பெரியார் ஈழநாட்டில் நன்கு மதிக்கப்பெற்ற ஒரு சைவச் சான்றோராகத் திகழ்ந்தவர் என்று பல நண்பர்கள் மூலம் அறிகிறோம்.

கலை

[பத்திராசிரியர்]

நாகரிகம் முதிர்ந்த இக்காலத்தில் இச்சொல்லை அடிக்கடி கேட்கின்றோம். எந்த தேசம் கலையில் அதிக அபிவிருத்தி அடைந்திருக்கின்றதோ அதையே சிறந்த தேசமாகக் கருதுகின்றனர். தற்போது மேனாடுகளில் கலை அதிகமாகப் போற்றப்படுவதால் நம் தேசத்திலும் அதைப்பற்றி எண்ண ஆரம்பித்தனர். அவைகளைப்பற்றி ஆராயப்புகுந்தபோது, கலைகளின் முடிவை பல்லாயிரககணக்கான ஆண்டுகளுக்கு முன்னமேயே நம்முன்னோர் கையாண்டு வந்தது ஆங்காங்குள்ள ஆலயங்களில் காணப்படும் ஓவியங்களினாலும் சிற்பங்களினாலும் நன்கு விளங்குகின்றது. ஆனால் இடைக்காலத்து எப்படியோ இவைகட்கு ஆதரவு குறைந்து வந்திருக்கிறது. மோர் குடிப்பது தொன்று தொட்டு வந்த வழக்கமாயினும் அமெரிக்கா தேசத்து வெளிவந்த ஆராய்ச்சிப் பத்திரிகைகள் அக்கருத்துக்களை வெளியிடும்போதே நம்மிற்பலர் மோரின் பெருமையை உணருகின்றனர். அதேபோல ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவுருவப் பொலிவு எவ்வளவு மனக்கவர்ச்சியுடையதாயிருப்பினும் அயல் நாட்டார் வந்தன்றோ அதன் பெருமையை நமக்கு விளக்கவேண்டியிருக்கின்றது! சுமார் ஆயிரம் வருடங்கட்கு முன் அல்லவா "இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால், மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று அறைந்தது அப்பர் அருள் வாக்கு. அந்த எடுத்த பாதத்தின் அழகு தற்காலத்தில் யாரால் அனுபவிக்கப் படுகின்றது? கலை வல்லுநரே அவைகளை உணர முடிகின்றது. சில இடங்களில் அவ்வெடுத்த பாதத்தையும் காண அரிதாகின்றது.

பொது மக்கட்கு ஈசனின் பல திருமேனி வடிவங்களின் தத்துவங்களை எடுத்து விளக்கவேண்டியது மிகவும் இன்றியமையாத தொன்றாகும். கலைகளின் பல அம்சங்களை

ஈசனின் பல வடிவங்களாகக் காணப்படுகின்றன. ஆகையால் அவ்வருள் திருமேனிகளின் உண்மை நிலைகளை அறிவதற்கு வேண்டிய சாதனங்களை எங்ஙனம் கலைகளின் அபிவிருத்தியால் நாம் அடையலாம் என்பது சிந்தித்தற்கு உரியதாகும்.

கடவுளைக் காட்டும் கண்ணாடி

[மயிலைகிழார் இளமுருகனார்]

கண்ணாடி பயன்மிக்குடைய பொருள்களுள் ஒன்று. நமது கண் எல்லாப் பொருள்களையும் பார்க்கும். தன்னையே பார்ப்பதற்கு ஒரு கண்ணாடியின் உதவி தேவை. சில பொருள்களை நேரே பார்க்க முடியாது, கண்ணாடி மூலம் பார்க்கலாம். சூரியனை நேரே பார்க்கக் கண்கூசும். ஒரு புகைக் கண்ணாடியின் மூலம் சூரிய கிரகணத்தன்று அனைவரும் பார்ப்பது நமக்குத் தெரியும். கண்ணுக்குப் புலப்படாத ஆழத்திலுள்ள பொருள்களைச் சில கண்ணாடிகள் மூலம் (Series of Reflecting mirrors) பார்க்கலாம். விண்மீன்களைத் தொலை நோக்காடி (Telescope) மூலமாகவும், அவற்றிலுள்ள பிருதிவி வாயுப்பொருள்களை நிறநோக்காடி (Spectroscope) மூலமாகவும் பார்க்கலாம். கிருமிகளைப் பெருநோக்காடி (Microscope) மூலமாகவும், நமது உடம்பிலுள்ள என்பு முதலிய கூறுகளை உண்ணோக்காடி (X-ray tube) மூலமாகவும் பார்க்கிறோம். வேறு பற்பல வகையான ஆடி வகைகளுமுண்டு. இவைகளெல்லாம் அசுத்த மாயா புவனத்திலுள்ள பொருள்களைக் காணப் பயன் தருவன. கடவுளைக் காண்பதற்கு இவை உதவி செய்யமாட்டா.

உலக முறையை ஒட்டிக் கடவுள் வழிபாட்டில் உபசாரத்துக்குக் கண்ணாடி காட்டப்படுகிறது. சோடசோபசார தீபாராதனையில் பூர்ண கடதீபம் கற்பூரம் முடிந்தவுடன் அஷ்டமங்கலம் சமர்ப்பித்தல் உண்டு. அவற்றுள் ஒன்று கண்ணாடி காட்டுதல். பள்ளியறையில் கண்ணாடி வைப்ப

துண்டு. பெரிய பிராகாரங்களில் எழுந்தருளும் மூர்த்திகளைத் தரிசிக்க நிலைக்கண்ணாடிகள் வைப்பதுண்டு. திருச்செந்தூரில் ஆறுமுக நாயனார் புறப்பாட்டில் அக்நி மூலையிலுள்ள கண்ணாடியில் தரிசனம் செய்ய நூற்றுக்கணக்கான அடியார்கள் இடித்து நெருக்கிக் கூடுவதுண்டு. இத்தகைய கண்ணாடிகளில் திருவுருவ அலங்கார விசேஷம் முதலியவற்றைக் கண்டின்புறலாம். இவைகட்குக் கடவுளைக் காட்டும் கண்ணாடி என்று உபசாரமாகக் கூறுவதே பொருந்தும்.

கடவுள் விரும்பும் கண்ணாடி ஒன்றுண்டு. அதைத் தான் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர் திருவிருத்தம் ஒன்றில் (4. 102. 3) அழகாகக் கூறுகிறார். அத்திருவிருத்தம் கீழ் வருமாறு :—

பூம்படி மக்கலம் பொற்படி மக்கலம் என்றிவற்றால்
ஆம்படி மக்கலம் ஆகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேல்தமிழ் மாலைகளான்
ஆம்படி மக்கலம் செய்து தொழுதுய் மடநெஞ்சமே.

படிமக்கலம் என்றால் கண்ணாடி. ஆரூரில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் கடவுள் கண்ணாடி வேண்டும் என்பரேல் தமிழ் மாலைகளால் கண்ணாடி செய்து கொடுத்துத் தொழுது உய்யலாம் என்பது அப்பர் சுவாமிகள் கருத்து. எனவே கடவுள் விரும்பும் கண்ணாடி தமிழ்மாலைகளே என்பதும், தமிழ் மாலைகளில் கடவுளைக் கண்ணாடியிற் காணுமாறு போலே காணலாம் என்பதும் புலப்படுகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் மாலைகள் தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளேயாம்.

சாதாரணமான கண்ணாடியில் ஒரு பொருளின் எல்லா நிலைகளையும் காண முடியாது. உதாரணமாக ஓர் ஓவியத்தில் திருவடியின் அழகு, செம்மை, குளிர்ச்சி, ஆற்றல், தன்மை முதலிய அனைத்தையும் காண இயலாது. தேவாரமாகிய கண்ணாடியில் இவைகளை ஒருங்கே காணலாம். அழகெழுதலாகாத அருட்சேவடியின் அழகை எந்த ஓவியத்தில் கண்

ணாடியிற் காண முடியும்? நனைந்தனைய திருவடியின் குளிர்ச்சியை எக்கண்ணாடியிற் காணலாம்? நீள் விசும்பை ஊடறுத்து நின்ற அடியின் ஆற்றலைக் கண்ணாடி காட்டுமா? அரை மாத்திரையி லடங்கும் அடி அகலம் அளக்கிற்பாரில்லா அடியின் தன்மை பருமைகளை ஒருங்கே எந்தக் கண்ணாடி காட்டும்? உருவிரண்டும் ஒன்றோடொன்றொவ்வா அடி உருவென்றுணரப்படாத அடியின் தன்மையை எக்கண்ணாடியிற் காண இயலும்? குறைந்தடைந்தார் ஆழாமை காக்கும் அடியின் அருட்டிறத்தைக் கண்ணாடி காட்டுமா? புகலிழந்த குருடரும் தம்மைப் பரவக்கொடு நரகக்குழி நின்றருள் தருகை கொடுத்தேற்றும் ஐயாறன் அடித்தலம் எந்தக் கண்ணாடியில் தனது பேரிரக்கத்தை வெளிப்படுத்தும்? இனித்தமுடைய எடுத்த பொற்பாதத்தின் இனிமையை எங்கு காணலாம்? இவையனைத்தையும் ஒருங்கே தேவாரத் தமிழ் மாலைகளிற் காணலாம். திருவடிமுதல் திருமுடிவரையுள்ள எல்லாவற்றையும் தேவாரம் தெளிவாகக் காட்டும். கடவுள் சொரூப நிலை, தடத்த நிலை, இலக்கணம், உயிர்கட்குச் செய்யும் உபகாரம் முதலியன எல்லாவற்றையும் தொலை நோக்காடி, நுண்ணோக்காடி, பெருநோக்காடி முதலிய பல கருவிகளைக்கொண்டு பிற பொருள்களை விவரமாக அறிவதுபோலத் தேவாரக் கண்ணாடியிற் காணலாம்.

இதனால்தான் அப்பர் சுவாமிகள் ஆரூர் இனிதமர்ந்தார்க்குத் தமிழ் மாலைகளால் படிமக்கலம் செய்து கொடுத்தார். இவர் தமிழ் மாலைகளை விரும்பிய பரமனும் இவருக்கு "நாவுக்கரசு" என்ற பட்டமளித்தான். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக் குலகவர்முன் தாளம் ஈந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளன் ஆயினான். "அர்ச்சனைப் பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகட்குக் கட்டளையிட்டான். கோவை பாடவைத்து ஏடும் எழுத்தாணியும் கொண்டெழுதினான். சேந்தன் களியுகந்து திருப்பல்லாண்டு பெற்றுத் திருத்தேரையும் ஓடவைத்தான். மூலன் உடலுள் முனியைப் புகுத்தித் திருமந்திரம் ஓத

வைத்தான். தாயுமிலி தந்தையிலி தான் தனியனாயினும் காரைக்காற் பேயாரை அம்மையே என்றழைத்தான். பழுத்தமுது தமிழ்ப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை இடித்து வழி கண்டான். "உலகெலாம்" என்று அடியெடுத்தும் கொடுத்தான்.

நாமும் அவன் விரும்பிய தமிழ் மாலைகளை விரும்பி ஓதியுணர்ந்து, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, அவனைத் திருமுறைப் படிமக்கலத்தில் கண்குளிரக் கண்டு தொழுது உய்வோமாக.

ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் உபந்நியாசக் குறிப்புகளினின்று

உதிர்ந்த மலர்கள்

[தொண்டன்]

1. குரு என்ற விதையில் லிங்கம் என்ற முளையும் சங்கமம் என்ற மரமும் தோன்றும். குரு இருந்து லிங்கத்தையும், சங்கமம் என்னும் அடியாரையும் காட்டல் வேண்டும்.

2. ஜலமும் அதன் நிழலும் பிரியாதிருத்தல் போலக் கடவுளும் அவர் அருளும் பிரியாது கண்ணுக்குப் புலப்படாது இருக்கும்.

3. ஒரு தாய் பருவத்திற்குத் தக்கபடி கைக் குழந்தைக்குப் பாலும் அதற்கடுத்த பருவத்தில் அன்னம் முதலியன கொடுப்பாளோ அதேபோல் ஈசன் நமக்கு நம் பக்குவத்திற்குத் தக்கபடி நம்மைப் பார்த்து அருள் செய்வார்.

4. மிகப் பழங்காலத்தில் ஞானத்தில் திருஷ்டியிருந்தது. அதற்குப் பின் பக்தியில் திருஷ்டியிருந்தது. இன்னும் பின்னர் புண்ணியத்தில் திருஷ்டியிருந்தது. தற்காலத்திலோ பணத்திலே திருஷ்டி.

5. கடவுளின் தயை பூவில் வாசனை போலும், வைரத்தில் ஒளி போலவும், பாலில் ருசி போலவும் பிரிக்கமுடியாதபடி இருக்கின்றது.

6. இல்லறத்தார்க்கு இருக்கவேண்டியவை அன்பும் அறமும். தயையோடு கூடிய தருமமே பெரும் தருமமாகும்.

சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜக் காரியாலயம் கோடைவிடுமுறைக்காக மேமீ 10வ முதல் ஜூலைமீ 10வ வரையில் மூடப்படும். பத்திரிகை புத்தகம் முதலியன பற்றிய கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவெல்லாம் இவ்விடுமுறை கழிந்த பின்னரே கவனிக்கப்படும்.

2. நமது சமாஜத்தின் சார்பில் ஒரு கோடைவிடுமுறைச் சித்தாந்த வகுப்பு நடத்துவதாக ஆலோசிக்கப்பட்டது. நீலகிரி, உதகமண்டலம், குன்னூர், கொடைக்கானல் முதலிய மலைநாட்டுத் தண் பதிகளில் தகுந்த இடம் கிடைக்கவில்லை. திருக்குற்றாலத்தில் ஆனிமீ நடத்துவதாயின் பெரும்பாலும் பள்ளிக்கூடங்களில் விடுமுறை முடிந்துவிடுமானதால் நிரம்பிய பயன் கிடைக்காமற் போகும். இவைபோன்ற பல காரணங்களை ஒட்டி இவ்வாண்டில் இவ்வகுப்பு நடைபெறுவதற்கில்லையென்பதை மிக வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். அடுத்த ஆண்டில் இதை நடத்திவைக்கத் திருவருள் துணைபுரியுமென்று நம்புகிறோம்.

3. நமது சமாஜத்தின் சார்பில் இவ்வாண்டிலும் நவம்பர்மீ மூன்றும் ஞாயிற்றுக்கிழமையன்று (21-11-43) சைவத் தேர்வுகள் நடைபெறும். சென்ற ஆண்டின் பாடத்திட்டமே இவ்வாண்டுக்கும் உரியதாகும். சீகாழி மகாநாட்டில் புலவர் பண்டிதர் பலர் மாணவர்களைப் பயிற்றி இத்தேர்வுக்கு அனுப்பிவைப்பதாக வாக்குறுதியளித்தது ஞாபகமிருக்கலாம். இக்கோடை விடுமுறையில் இப் பரீக்ஷைகட்

குரிய பயிற்சி நடைபெறுதல் நலம் என்று அவர்கட்கு ஞாபக மூட்ட விரும்புகிறோம்.

4. திரிசிராப்பள்ளியில் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மௌன மடத்தில் சிவஞான சித்தியார் பாடமும், சென்னை சிவனடியார் திருக்கூட்டமண்டபத்தில் சிவஞான பாடியமும் முறையாக நடந்துவருகின்றன. வேறு பல இடங்களிலும் சித்தாந்த பாடம் முறையாக நடத்தப்படுகிறதாக அறிகிறோம்.

5. பழநியில் மே மீ 6உ முதல் மூன்று நாட்கள் திருப்புகழ் மகா நாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

முருகன் பெருமை

[ர. சேது அம்மையார்]

எம் குருநாதரவர்களை நினைவுக்கு வரச்செய்யும் தோற்றத்துடன் வீற்றிருக்கும் தலைவரவர்களுக்கும், தாய்மார்களுக்கும், மற்றுமுள்ள மெய்யன்பர்களுக்கும் என் தாழ்மையான வணக்கம். நம் காரியதரிசி அவர்கள் என்னால் ஆற்றுதற்கு இயலாத பணியொன்றை நியமித்து விட்டார்கள். இவ்வளவு பெரிய அவையின் முன்பு - அறிவு முதிர்ந்தோர் பலர் குழுமியுள்ள அவையின் முன்பு - பேசுவது இதுவே அடியேனுக்கு முதன்முறை. மேலும் ஆராய்ச்சியின் மணமே யறியாத என்னுடைய இச்சிறிய சொற்பொழிவில் குற்றங்கள் மிக மலிந்து கிடக்கும். அவைகளைப் பொறுத்தருளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இன்று யான் பேச வேண்டிய பொருள் "முருகன் பெருமை" என்பதாகும். முருகனின் பெருமை கடல்போன்றது. அவனது பெரு

* சீகாழியில் நடந்த சமாஜ விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு.

மையை எடுத்துச் சொல்வதென்றால் கடலின் ஆழத்தை அளப்பது போன்றது. பெரும் புலமை வாய்ந்த நக்கீரர் பெருமானே அவனைப் புகழ்ந்து பாடிய திருமுருகாற்றுப் படையிலே "நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமை" என்று கூறியவர் அதற்கு முன்னுள்ள அடியில் "யான் அறி அளவையின் ஏத்தி" என்று கூறியுள்ளார். "பெருமை பெறு நினது புகழ்பேச வேண்டும்" என்ற அருட்பா அடியும் இக்கருத்தைக் கொண்டதே.

முருகன் என்ற சொல்லின் பகுதியாகிய 'முருகு' என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. அழகு, இளமை, மணம், தெய்வத் தன்மை என்பன முக்கியமானவை. முதலில் அழகை எடுத்துக் கொள்வோம். முருகனழகு நம்முடைய அழியும் அழகைப் போன்றதன்று. நம் அழகு சிலகாலம் வரைதான் நிலைத்திருக்கும். உதாரணமாக, ஒரு மாமரத்தை எடுத்துக் கொள்வோம்.

அம்மரத்தைக் கடந்து செல்லும் வழிப்போக்கன் ஒருவன், உச்சியில் துளிர்த்து வரும் ஓர் இலையின் பொன்னிறத்தை நோக்கி அதன் அழகை ஆனந்தத்துடன் அனுபவிக்கின்றான். சரியாக நோக்குதற் பொருட்டு, தலையிலுள்ள தலைப்பாகையைக் கூட எடுத்துவிட்டுப் பார்க்கிறான். ஆனால் அதே இலை சில நாட்கள் கழித்து, பழுத்து, மஞ்சள் நிறமடைந்து, கீழேயும் விழுந்தபின், அதை மிதியடியால் மிதிக்கின்றோம் என்ற நினைவுமில்லாமல் மிதித்துச் செல்கின்றான். நம்முடைய அழகும் அம்மாந்தளிரின் அழகைப் போன்றதே. இளமையில், யௌவனப் பருவத்தில்தான் அழகு போற்றப்படுகிறது. வயது முதிர்ந்து "வளைமுதுகோட்டிக் கைதாற்றி நரம்பா லார்க்கையிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்" முதுமைப் பருவம் அடைந்தபின் அழகு என்னும் பதத்திற்கு அவ்வுடலில் பொருள் தோன்றுவதேயில்லை. ஆனால் முருகப் பெருமானின் அழகோ என்றும் நிலைத்திருக்கும் தன்மையதாய், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாமல் அனுபவிக்கக் கூடியதாய் விளங்குகின்றது. பின்வரும் செய்யுள் இதை நன்கு விளக்கும்.

"சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னில்
ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலு மெல்லாம்
ஆர்க்குள வுலகி லம்மா! அற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினும் தேவிட்டிற் றில்லை இன்னுமென் பார்வை தானும்"

இச் செய்யுள், சூர சம்ஹாரத்தின்போது, முருகக் கடவுளின் எழிலை வியந்து அவ்வரக்கன் பாடியது. ஒருவனைத் தன் நண்பனே கிளைஞனே புகழலாம். அது இயற்கையே. ஆனால் எவனொருவன் தன் பகைவனாலும் புகழப் படுகிறானோ, அவனே சிறந்தவன். முற்கூறியதினும் பிற்குறிப்பிட்ட புகழ்தான் சிறந்தது. இன்னும் அழகில் சிறந்தவன் மன்மதன். அவனழகையும் குறைக்கும் பேரழகன் முருகன். அள்ளிக் கொள்ளும் பேரழகன் இவன் என்பதை இவன் நாமங்களுள் ஒன்றாகிய குமாரன் என்பதே குறிக்கும். மாரன் = மன்மதனை, கு = குறைப்பவன். மாரன் கருநிறத்தோன். முருகன் செந்நிறத்தோன். செவ்வேள் என்பதைக் காண்க. இறந்தவன் மன்மதன். என்றும் அழியாதவன் முருகன். ஆதலின் கோடிக் கணக்கான மன்மதர்களுடைய அழகுகள் எல்லாம் ஒன்றாய்த் திரண்டு உருப் பெற்றாலும் முருகப் பிரான் திருவடி எழிலுக்கு ஆற்றாதன்றோ!

"ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்!"

அடுத்தது இளமை. நமக்கு, இளமை குறிப்பிட்ட சில வருடங்கள்தான் நிலைத்திருக்கக் கூடியது. ஆனால் முருகனோ என்றும் இளையவன். நமது நக்கீரனாரும்,

"குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய்"

என்று அப்பெருமானை விளித்தார். பின், மணம். நாம் தற்காலத்தில் மிகவும் எளிதாகக் கிடைக்கும் பல வாசனைத் திரவி

யங்களை உபயோகித்து, கேவலம் செயற்கை மணமுண்டாக்கிக் கொள்கின்றோம். முருகனுக்கோ இயற்கையிலேயே தெய்வீக மணமுண்டு. அடுத்ததாக முருகனின் தோற்றத்தைச் சற்று நோக்குவோம். வேலேந்திய செவ்வேள் மயில் வாகனத்தின்மீது எழுந்தருளுவதை நக்கீரர் திருமுருகாற்றுப்படை துவக்கத்திலேயே,

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாங்கு"

என்று விளங்க வைத்திருக்கின்றார். நீல நிறமுள்ள கடலினின்று செங் கதிர்களைப் பரப்பிக்கொண்டு கதிரவன் எழுவதை ஒருவாறு ஒக்கும், ஆடும் பரிமேல் அறுமுகவன் காட்சி. குமரகுருபர ஸ்வாமிகளும் "சோதி இளம்பரிதி நூறாயிரங் கோடிபோல வளர்தரு தெய்வீக வடிவும்" என்றார். நம் மனதைக் கவரத்தக்க ஓர் உருவத்தைப் பொதுவாக நோக்கியபின், அவயவம் அவயவமாக முகத்தினின்றும் கால்வரை நோக்குகின்றோமல்லவா? அதேபோல் உள்ளங் கவர் கள்வனாகிய நம் முருகனுருவத்தையும் சற்றுப் பார்ப்போம். முருகனுக்கு இன்னொரு பெயர் ஷண்முகன். இதற்குப் பொருள் ஆறுமுகங்களுடையவன் என்பது. ஒரு முகம் சிவத்தைக் குறிக்கும். இரண்டாவது சக்தியைக் குறிக்கும். மற்றைய நான்கும் முறையே முகில் வண்ணனையும், நான்முகனையும், ஐங்கரத்தோனையும், கதிரவனையும் குறிப்பன. சிலர் சிவத்தையே பூஜிப்பர். சிலர் விநாயக பூஜை மட்டும் செய்வர். ஆனால் நம் அறுமுகவனை வழிபடும் அன்பர், அனைவரையும் தொழுதவராவர். முருகன் சமஷ்டித் தெய்வம். ஆறுமுகம் எனற்கு எங்கும் உள்ளவன் என்பதே பொருள் என்பர் சிலர். பெருந் திக்குகள் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கே உள்ளன. அவற்றுடன் மேல், கீழ் என்ற இரு இடங்களும் காணக் கிடக்கின்றன. ஆதலின் இவ்வாறிடங்களிலும் நிறைந்தவன் ஆறுமுகன். நம் வடிவம் போன்றதன்று அவனுருவம். நாம் இருக்க இடம் விரும்புகின்றோம். அவனுக்கு அங்ஙனம் இடம் வேண்டியதில்லை. "ஐந்து முகத்தோடு அதோ

முகமுந் தந்து" என்றார் குமரகுருபரர். ஆறுவதாகிய முகம் கீழ் நோக்கிய முகம். அதோ முகம் எனப் படும். அம்முகத்தை அறிந்தோர் நல்ல ஞானிகளே. உதா ரணமாக சாதாரண அறிவுள்ள ஒருவனை, தரையின்மீது வைத்துள்ள ஒரு பெட்டிக்கு எத்தனை பக்கங்கள் உள்ளன என்றால் ஐந்து என்றே சொல்வான். சிந்தனை உள்ளவனுக்குத் தான் மறைந்திருக்கும் ஆறுவது பக்கம் நினைவுக்கு வரும். "அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்" என்றார் ஒரு பெரியாரும்.

அறுமுகக் கடவுளின் ஆறு முகங்களும் எவ்வகையான பணிகளை இயற்றுகின்றன என்பதை நம் நக்கீரர் திருமுரு காற்றுப்படையில் கூறியுள்ளார். ஒரு முகம் அஞ்ஞான மாகிய இருளைப் போக்குதற் பொருட்டு சூரியனைப்போன்ற தன் முகத்தினின்றும் கதிரொளி பரப்புகின்றது. இன் னொன்று, தன் மெய்யன்பர்கள் வேண்டும் வரங் கொடுக் கின்றது. மற்றொன்று அந்தணர்கள் செய்யும் வேள்விகளை ஏற்றுக் கொள்ளும். இவையல்லாது இன்னும் பல நற் செய்கைகளைச் செய்து திங்கள்போல விளங்கும். ஐந்தாவது முகம் ஆறுவது முகம் வள்ளியம்மையொடு நகை புரியும். இவ்வாறு முகங்களும் எழில் நிறைந்தன வல்லாமல் கருணை சொரியும் தன்மையுமுள்ளன. "மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி......" என்றார் ஒரு பெரியார். அம் முகங்களை நோக்கியதுமே அவைகளினின்றும் முகில் மழை பெய்கின்றது போன்று கருணை பொழிவதை நோக் கினர். தாரகனுடன் ஷண்முகப் பெருமான் போர் புரியும் போது முந்நான்காகும் விழிகளினருளைத் தாருகன் கண்ட னன். கொடிய பகைஞனையும் கருணையுடன் அவ்விழிகள் நோக் கினவென்றால், அவ்விழிகளின் கருணைக்கு எல்லையுண்டோ?

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலக முய்ய"

முருகனின் முகக் கருணையினை முடியக் கூறுவார் எவர்? முகம்போலவே கைகளும் கருணை நிரம்பியன.

கைகளுக்கு அடுத்தாற் போலுள்ளன கால்கள். நம் பெருமானுடைய திருவடிகள் அப்பரமனை நிமிடந்தோறும் மனத்திருத்தித் தொழும் அன்பர்களுக்குப் பரசுகத்தைத் தருவன. இன்னும், "முருக, அறுமுக, குமர, சரணம் புகுந்தேன்" என்று மொழி குழற அழுது தொழுது உருகும் தொண்டர்களுக்கு அஞ்சலளிக்கும் அருள் பெற்றன. அவனடிகள் பிறந்திறந்து பிறக்கும் மானிடர்க்குத் தன்னை அடைந்தபோது பிறவிக் கடலைக் கடப்பதற்குக் கலனாக உதவி செய்யும் தன்மையன. கலிவெண்பாவில், குமரகுருபரர் நம்பிரானது திருவடி லக்ஷணத்தைக் கூறுங் கால் "யான் எனது என்றற்ற இடமே திருவடியாக" என்றார்! அகங்கார மமகாரங்கள் நம்மிடத்தில் இருக்கும் வரை அவன் திருவடிகளைக் காண இயலாது. "ஆணவ மலம் முற்றும் அழிவது மிக்க கடினம். பெருங்காயம் வைத்திருக்கும் ஒரு பெட்டியினின்று அப்பெருங்காயத்தை நீக்கிய பிறகும் அவ்வாசனை சிறிது அப்பெட்டியில் இருப்பதுபோல், ஆணவ மலம் நம்மைவிட்டுப் பிரிவது எளிதல்ல. ஆயினும் அம்மலத்தினின்றும் நாம் விடுபட்ட பின்பே பரமன் பாத கமலங்களைப் பார்க்க இயலும். "வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்டிநீ யாதருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினேன், எனக்கென்று ஒன்றும் இல்லை எல்லாம் நின்னதே" என்று கூறி அகங்கார மமகாரங்களை முற்றும் நீக்கிய பின் தான் முருகன் திருவடித் தாமரைகளைக் காணப்பெறலாம். இச்சந்தர்ப்பத்தில் நமக்கு ஓர் உண்மை நினைவுக்கு வரலாம். அதாவது, கடவுளை எவ்வுருவத்தில் வழிபட்டோரும் அக்கடவுளின் திருவடிகள் மூலமாகவே ஞானம் பெற்றிருக்கின்றனர். உதாரணமாக நம் மணிவாசகப் பெருமானும், தேன் போன்ற தம் திருவாசகத்தில், சிறப்பாக இம்மாதத்திற்குரிய திருவெம்பாவையில், கடைசிச் செய்யுளில் ஒவ்வொரு அடியிலும் சிவபெருமானின் திருவடிகளையே சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

"போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோ ரெம்பாவாய்"

இதுவரை முருகப்பிரானது தோற்றத்தை ஒருவாறு நோக்கினோம். அவனைக் காண்பதற்கு ஆயிரம் கண்கள் இருந்தாலும் போதா.

"மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேஅந்த நான்முகனே"

என்றார் அருணகிரிநாதர்.

இனி, அவனை நினைக்கும் பொழுதே நமக்கு நினைவுக்கு வரும் ஆடும்பரி, வேல், அணிசேவல் முதலியனவற்றைக் கவனிப்போம். முருகனை நினைக்கும் பொழுதே அவன் ஏறிவரும் மயில் வாகனம் நம் எண்ணத்தில் தோன்றுகிறது. உடனே அவன் கையில் பிடித்திருக்கும் வேலையும் சேவற் கொடியையும் நினைக்கின்றோம். இம்மூன்றனுள் வேலே மிகவும் முக்கியமானது. வேல் ஞானத்தைக் குறிக்கும். அது இலை வடிவமானது. ஆனால் பிரகாசமுமுள்ளது. இதை நக்கீரனார் "சுடரிலை நெடுவேல்" என்று அழகாக விளக்குகின்றார். சுடராகிய இலை வடிவத்தையுடையது வேல் என்றார். இனி அதன் மகிமையைப் பார்ப்போம்.

"தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை"

என்றார் ஒரு பெரியார். தமிழில் பொதுவாக வெல்லுதலைச் செய்வது வேல் என்பர். அஞ்ஞானப் பகையை வெல்ல வேலினும் மிக்க தொன்றில்லை. போக்குதற்குரிய நிலையில்

நம்பால் உள்ளன பலவற்றில் பகை ஒன்று. பகைவரினும் நண்பரைப் போன்று நடித்து நெஞ்சகத்தில் கொஞ்சமும் நல்லெண்ணமின்றிப் பகையெண்ணமே மிகுந்தவர்தான் மிகக் கொடியவர். இத்தகைய பகைவன்தான் அஞ்ஞானம். நாம் என்றோ அன்றே அவனும். இத்தகைய அஞ்ஞானப் பகையை வெல்ல வேலினும் மிக்க தொன்றில்லை. இவ்வேல் தனிச் சிறப்புடையது. மற்றைய படைகளைப்போல் உடம்பை அழிக்காமல் உயிருள் கலந்து உயிரையும் மயக்கும் பெரும்பகையாகிய அறியாமையை அழித்து ஞானந் தரும். ஞானம் ஒவ்வொருவருக்கும் மிக வேண்டிய தொன்றும். இல்லையேல் ஆணவ இருட் குழம்பில் அவதியே படல் வேண்டும். ஞான வருகை, அஞ்ஞான நீக்கம். இன்னும், வேல் எவ்வகைத் துன்பங்களையும் நீக்கவல்லது.

"பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவன்
இசைக்குஉருகி வரைக்குகையை இடித்து வழிகாணும்"

ஒருவரன்றி ஆயிரவர் துன்பத்தை ஒரே காலத்தில் போக்கிய சிறப்பு வேலுக்கு உண்டு என்பதை இவ்வடிகள் விளக்குகின்றன. துன்பத்தை நீக்கி இன்பந் தரவல்லது வேல். இன்னும் வழித்துணையாகும் வேல்.

"தனித்துவழி நடக்குமென திடத்தும்ஒரு வலத்தும்
இருபுறத்தும் அருகடுத்து இரவுபகல் துணையதாகும்"

ஒப்பற்ற துணையாகும் வேல். முடிவாகக் கூறும் ஒப்பற்ற துணை மனைவி, மக்கள், உற்றார் உறவினரன்றி முருகன் வேலும் அதனை ஏந்திய கையுமாகும்.

(தொடரும்)

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. [illegible] (Publisher) for the Saiva Siddhanta Maha [illegible] at "[illegible]iruvarulagam", 22-A. Kallukaran Street, Mylapore, Madras.